**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org
Web: www.peopleswatch.org

30.09.11

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.09.2011 முதல் 30.09.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**01-09-2011 முதல் 30-09-2011 முடிய இம்மாதத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | |
| 5. | வகுப்பறை வன்முறை | |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | |
| 9. | கொத்தடிமை | |
| 10. | பெண் சிசு கொலை | |
| 11. | குழந்தை திருமணம் | |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | |
| 17. | மணல் கொள்ளை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | |
|---|---|---|
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | |
| 22. | பொதுவானவை | |
| | மொத்தம் | |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-9
## 01.09.2011 முதல் 30.09.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 2212. | 01.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே உள்ள அ.தொட்டியபட்டியைச் சேர்ந்த சோலைமலை மனைவி சங்கரம்மாள்(45). வீட்டில் இரவு தூங்கிக் கொண்டிருந்த சங்கரம்மாள் மர்ம நபர்களால் கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமணி |
| 2213. | 01.09.2011 | **தருமபுரி மாவட்டம்:** அரூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு படிக்கும் மாணவி சத்தியா. இவரது தாய், தந்தை கோபலான், லட்சுமி. கட்டிடப் பணி செய்துவரும் இவர்கள் சத்தியாவுக்கு தீருமணம் செய்ய முயற்சி. அரசு அதிகாரிகள் சத்தியாவை மீட்டனர். | குழந்தைத் திருமணம் | டெக்கான் கிரானிக்கல் |
| 2214. | 01.09.2011 | **சென்னை மாவட்டம்:** போரூர் பகுதியைச் சேர்ந்த முத்து மகன் சந்திரபாபு. தனது பட்டா பெயர் மாற்றம் செய்ய அனைத்து ஆவணங்களும் சரியாக இருந்தும் வட்டாட்சியர் மீனாட்சி ரூபாய் 4.,000 ரூபாய் லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |
| 2215. | 01.09.2011 | **தேனி மாவட்டம்:** வீரபாண்டியைச் சேர்ந்த மதுரையம்மாள்(65). தனது மூன்று பேரக்குழந்தைகளுடன் சென்ற ரேசன் கார்டு கேட்டு பலமுறை மனு கொடுத்துள்ளார். ரம்ஜான் என்று தெரிந்தும் தாலுகா அலுவலக ஊழியர்கள் கலெக்டர் அலுவலகம் செல்லுமாறு கூறிய மதுரையம்மாளை அலைக்கழித்ததாகப் புகார். | முதியவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2216. | 01.09.2011 | **மதுரை மாவட்டம்:** கப்பலூரில் அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் சுரேஷ்குமார், பரமேஸ்வரி, சதீஷ்குமார், கார்த்திக், சரண்யா, இவர்கள் அனைவரும் பெற்றோர் நடத்தையால் மனமுடைந்து வீட்டிற்கு செல்லாமல் கோயமுத்தூர் சென்ற குழந்தைகள் மீட்கப்பட்டு டான்பாஸ்கோ ஏழைகள் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2217. | 01.09.2011 | **மதுரை மாவட்டம்:** சமயநல்லூர் அருகே உள்ள தேனூர் வைகையாற்று படுகையில், அனுமதியின்றி மணல் திருடிய தண்டியப்பன், விஜயக்குமார் கைது, இரு மாட்டுவண்டிகள் பறிமுதல். | மணல் கொள்ளை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2218. | 01.09.2011 | **மதுரை மாவட்டம்:** மகபூப்பாளையத்தைச் சேர்ந்த ராஜன் மகள் அருணாதேவி(27). சொட்டதட்டி பகுதியைச் சேர்ந்த ஒருவர் அருணாதேவியை கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2219. | 01.09.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் அடுத்துள்ள வீரபாண்டி கிராம பகுதியில் தலைமறைவாக இருந்துவரும் சாராய வியபாரிகளைப் பிடிப்பதற்குச் சென்ற காவலர்கள் அவர்களைப் பிடிப்பதற்காக நேரு(13) வை அணுகினார். காவலர்களுக்கு பயந்து ஓடிய சிறுவன் படுகாயம். | குழந்தைகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2220. | 01.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழநி கல்லறைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த செபாஸ்டின் மனைவி சேசம்மாள்(80). சேசம்மாள் மகன் உபகாரன். இருவருக்கும் நடந்த தகராறில் ஆத்திரமடைந்த உபகாரன் சேசம்மாளை கத்தியால் குத்திக் கொலை செய்ததாக கைது. | முதியவர்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2221. | 01.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு அருகே உள்ள பண்ணைக்காட்டைச் சேர்ந்த நிவாசினி(24) தேனியில் கல்லூரியில் பேராசிரியராக வேலை செய்கிறார். பேருந்து நிறுத்தத்தில் நின்றுக் கொண்டிருந்த நிவாசினியை காரில் வந்த மர்ம நபர்கள் கடத்திச் சென்றதாக புகார். பண்ணைக்காடு தீருமலைராஜன், புவனேஸ்வரி, கோபீஸ்வரி, சித்ரா 4 பேர் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2222. | 02.09.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை ஆதிதிரவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை சட்டத்துக்கு புறம்பாகவும், விதிகளை மீறியும் கணேசன் என்பவரிடம் இருந்து காரைக்குடி அ.தி.மு.க., எம்.எல்.ஏ., சோழன் சித. பழனிச்சாமி இருவரும் பறித்ததாகவும் அவர்கள் மீது காவல்துறையில் புகார் கொடுத்தவர்களைக் கொலை மிரட்டல் விடுத்ததாவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்ககோரி மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு. | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2223. | 02.09.2011 | **மதுரை மாவட்டம்:** தென்பரங்குன்றத்தைச் சேர்ந்த விருமாண்டி மகள் மணிமேகலை(19). வீட்டில் தனியாக இருந்த மணிமேகலையை அதே பகுதியைச் சேர்ந்த குண்டுமணி, | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடி, பரமேஸ்வரன், உள்ளட 8 பேர் தாக்கியதோடு அவரது 3 பவுன் நகையை பறித்துச் சென்றதாக புகார். | | |
| 2224. | 02.09.2011 | **சேலம் மாவட்டம்:** ஓமலூரைச் சேர்ந்த லட்சுமி இதய பாதிப்பு ஏற்பட்டு சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணம். பிரேத பரிசோதனையில் போது அவரது கழுத்தில் இருந்த 4 பவுன் நகையை மருத்துவமனை பணியாளர்கள் திருடியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2225. | 02.09.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி அடுத்த கொள்ளுப்பாளையம், எம்.ஜி.ஆர். நகர் நரிக்குறவர் காலனியைச் சேர்ந்த நரிக்குறவர் காலனியைச் சேர்ந்த இளைஞர்கள் கவுண்டமணி மாஜிம்(22), மோகன்காசிராஜா (24), ஒக்கினோவா சோரின் ரியூகராத்தே டோ இந்தியா என்ற பயிற்சியில் தேர்ச்சிப்பெற்ற மாணவர்கள் மலேசியாவில் நடக்கும் சர்வதேச கராத்தே போட்டியில் கலந்துக் கொள்ள வாய்ப்பு கிடைத்தும், பாஸ்போர்ட் கிடைக்காததால் மாணவர்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2226. | 03.09.2011 | **சேலம் மாவட்டம்:** உளுந்தூர்பேட்டை அடுத்த எறையூர் கிராமத்தைச் சேர்ந்த சவுமியா(11). தனியார் பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கும் சவுமியாவை எறையூர் புதுகாலனியைச் சேர்ந்த சவுரிமுத்து(60) பாலியல் பலாத்காரம். சவுரிமுத்து கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2227. | 03.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** உடன்குடி அடுத்த சீர்காட்சியைச் சேர்ந்த ஆதிலிங்கம் (எ) பாஸ்கர் மனைவி பிரபாவதி(24). திருமணம் நடந்த ஐந்து நாட்களில் இருவரும் பிரிந்தனர். இந்நிலையில் பாஸ்கர் வேறொரு பெண்ணை இரண்டாவது திருமணம் செய்ய முயன்றதாக பிரபாவதி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2228. | 03.09.2011 | **தேனி மாவட்டம்:** ஆண்டிபட்டி அருகே கோயில்பட்டியைச் சேர்ந்த கருப்பையா மகள் ஜெயப்பிரதா(20). வேலைக்குச் சென்ற ஜெயப்பிரதாவை காணவில்லை எனப் புகார். இந்நிலையில் ஜெயப்பிரதா மதுரை காமராஜர் பல்கலை கல்லூரி பின்புறம் கழுத்தை இறுக்கி கொலை செய்யப்பட்டு இறந்து கிடந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 2229. | 03.09.2011 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி பேருந்து நிலையம் அருகே மயங்கிக் கிடந்த கர்ப்பிணி பெண் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி மரணம். விசாரணையில் சமயநல்லூர் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருகே தேனூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வம் மனைவி முனியம்மாள் என தகவல். | | |
| 2230. | 03.09.2011 | **மதுரை மாவட்டம்:** நாகமலை புதுக்கோட்டை அருகேயுள்ள ஆலம்பட்டியைச் சேர்ந்த பிச்சைமணி மகள் ரம்யா(18). ரம்யாவை வடபழனியைச் சேர்ந்த சுரேஷ், கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2231. | 03.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே உள்ள பூவலந்தான் கிராமத்தைச் சேர்ந்த முத்து மனைவி செய்யதம்மாள்(60) பரமக்குடி சந்தைக்குச் சென்ற செய்யதம்மாளின் 41/2 பவுன் நகையை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2232. | 03.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** உடையார்நாதபுரத்தைச் சேர்ந்த தவசி மனைவி குருத்தாயி(55). பரமக்குடி சந்தைக்கு வந்த குருத்தாயின் நான்கேமுக்கால் பவுன் நகையைப் பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2233. | 03.09.2011 | **கடலூர் மாவட்டம்:** வேப்பூர் அடுத்த சேப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் மகன் ராஜதுரை(16). வகுப்பறையில் மின் கோளாறு ஏற்பட்டது. வகுப்பாசிரியர் மின் கோளாறை சரி செய்யும்படி கூறினார். சரி செய்ய முயன்ற ராஜதுரை மின்சாம் தாக்கி மரணம். ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மாணவ, மாணவியர் சாலை மறியல். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 2234. | 03.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை டி.பி.சத்திரம் பிளாக்கைச் சேர்ந்த மோகன் மகன் ராகுல்(14). புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள இஎல்எம் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் மாணவன். வகுப்பாசிரியையின் செல்போன் தொலைந்ததால் ஆத்திரமடைந்த நித்யா மற்ற மாணவர்கள் முன்னிலையில் மாணவன் ராகுலை நிர்வாணமாக்கி அடித்து உதைத்ததால் மனமுடைந்த மாணவன் விஷம் குடித்துத் தற்கொலை. பொதுமக்கள் சாலை மறியல். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 2235. | 03.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே கமலநாச்சியார்புரம் வடக்குத் தெருவைச் சேர்ந்த ரமேஷ்பாண்டியன்(46) மகன் கோடீஸ்வரன்(15). தங்கலில் உள்ள கலைமகள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் மாணவன். பள்ளிக்குச் சென்ற கோடீஸ்வரனை மர்ம நபர்கள் | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடத்திச் சென்று ரூபாய் 25 லட்சம் கேட்டு மிரட்டல். | | |
| 2236. | 03.09.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் பகுதியில் அதிகாரிகன் சோதனையின் போது அங்குள்ள ஓடையில் அனுமதியின்றி டிராக்டரில் மணல் அள்ளிய சுந்தர்(22), ராஜாக்காபட்டி காாத்திக்குமார்(21), பாலமேடு ஜெயபாலன்(23) கைது. 3 டிராக்டர் பறிமுதல். | மணல் கொள்ளை | தினகரன் |
| 2237. | 04.09.2011 | **கோவை மாவட்டம்:** கோவை மேட்டுப்பாளையம் தாலுகா கோவனூர் கிராமத்தில் வசிக்கும் ஐஸ் வியாபாரி குப்புசாமி. காவலர்கள் குப்புசாமி மீது பொய் வழக்குப்போட்டு காவல் நிலையத்தில் வைத்துச் சித்திரவதை செய்து கொலை. | காவல் நிலைய மரணம் | சன்நியூ ஸ் |
| 2238. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** தெப்பக்குளம் போலீஸ் சரகம், புதுராமநாதபுரம் சாலை பகுதியில் வசிக்கும் கடேஷ்குமார் மனவைி ஸ்டெல்லாமேரி(30). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த கடேஷ்குமார் ஸ்டெல்லாமேரியை கத்தியால் குத்திக் கொலை செய்ததாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமணி |
| 2239. | 04.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரத்தில் மாலை விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் இளைஞர்கள் மெதுவாகச் சென்றதால் போக்குவரத்துத் தடை. மாட்டு வண்டிகளுடன் அதிக நேரம் நின்றதால் காவலர்கள் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2240. | 04.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தொண்டி அருகே மோர்பண்ணை கிராமத்தைச் சேர்ந்த 17 வயது பெண். வீட்டிற்கு புன்புறம் சிறுநீர்கழிப்பதற்காகச் சென்ற பெண்ணை அதே கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் சின்னத்தம்பி, நாகூர்கனி, காளிக்கனி, அப்பெண்ணை பாலியல் பலாத்காரம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2241. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தை அடுத்த கள்ளிக்குடி மேலப்பட்டி காலனியைச் சேர்ந்த முத்துமாரி(24) மனைவி சந்தனமாரி(21) . சந்தனமாரி தனது 21/2 வயது குழந்தையுடன் காணவில்லை என முத்துமாரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந் தி |
| 2242. | 04.09.2011 | **நெல்லை மாவட்டம்:** பாபநாசம் தாலுகா பூண்டி கிராமம் தெற்கு தெருவைச் சேர்ந்த கிருஷ்ணனின் மகள் ராதா(22), அதே பகுதியைச் சேர்ந்த சுரேஷ்(24), இருவரும் காதலித்துத்தனர். சுரேஷ் திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றியதாக ராதா | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந் தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புகார். காதலன் வீட்டு முன்பு ராதா போராட்டம் | | |
| 2243. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தை அடுத்த உச்சபட்டி அகதி முகாமில் குடியிருப்பவர் பாபு மனைவி கேதீஸ்வரி(35) மகள் ஸ்டெல்லாமேரி(17). அதே முகாமில் குடியிருந்த நிரோசன்(21) ஸ்டெல்லாமேரியை திருமணம் செய்துக் கொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>கடத்தல் | தினத்தந்தி |
| 2244. | 04.09.2011 | **பெரம்பலூர் மாவட்டம்:** பெரம்பலூர் பேராளி என்ற கிராமத்தில் வசிக்கும் தலித் மக்கள். உயர் சாதியினர் வசிக்கும் தெருவில் சைக்கிள் ஓட்டக்கூடாது, சைக்கிளிள் இருந்து இறங்கி நடந்துச் செல்லவேண்டும் என உயர்சாதியினர் தடைவிதித்துள்ளதாக தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | மாலைமுரசு |
| 2245. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** பழங்காநத்தம் திருவள்ளுவர் நகரைச் சேர்ந்த அழகுராஜா மனைவி பொன்மாரி(31), 6 மாத கர்ப்பிணியான பொன்மாரியை கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சனை கேட்டுத் துன்புறுத்தியதால் மனமுடைந்த பொன்மாரி தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>வரதட்சணைக் கொடுமை<br>&<br>வரதட்சணை | தினகரன் |
| 2246. | 04.09.2011 | **மதுரை மாவட்டம்:** புதுமீனாட்சி நகரைச் சேர்ந்த வெங்கடேஷ்குமார் மனைவி ஸ்டெல்லாமேரி(29). குடிப்பழக்கத்தால் கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த வெங்டேஷ்குமார் ஸ்டெல்லாமேரியை கழுத்தை நெறித்துக் கொலை. வெங்கடேஷ்குமார் கைது. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>கொலை | தினகரன் |
| 2247. | 04.09.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் அம்மாபேட்டையைச் சேர்ந்த ராணி(25). கிச்சிபாளையத்தைச் சேர்ந்த சந்திரன்(17) அரசு பள்ளியில் பிளஸ் 2 படிக்கும் மாணவன் ராணிக்கு செல் போன் மூலம் ஆபாச எஸ்.எம்.எஸ் அனுப்பியதோடு, ஆபாசமாக பேசியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2248. | 05.09.2011 | **மதுரை மாவட்டம்:** பொள்ளாச்சி பகுதியைச் சேர்ந்த கனகா(23). காரியப்பாட்டியைச் சேர்ந்த பாண்டியன். இருவரும் காதலித்தனர். பாண்டியனின் பெற்றோர் திருமணத்திற்கு எதிர்ப்பு. பாண்டியன் மாட்டுத்தாவணி பேருந்துநிலையத்தில் கனகாவை ஏமாற்றி விட்டுச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2249. | 05.09.2011 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரைஅருகே உடையகுளத்தைச் | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த முத்துப்பாண்டி மகன் முத்துசெல்வம்(6), சரவணக்குமார் மகன்கள் சக்திவேல்(12), ஜெகன்(5), ரகு மகன் கிஷோர்(8). வீட்டருகே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை இராமநாதபுரம் எம்.எஸ்.கே நகரைச் சேர்ந்த சரவணன்(36) ராமேஸ்வரம் சென்னை ரயிலில் கடத்த முயற்சி. மாணவர்கள் காவலர்களால் மீட்பு. | & கடத்தல் | |
| 2250. | 05.09.2011 | **கடலூர் மாவட்டம்:** விருத்தாசலம் காவல் நிலைய சட்ட ஒழுங்கு சப்–இன்ஸ்பெக்டர் வனஜா அரசு பேருந்து மூலம் கடலூரில் இருந்து விருத்தாசலம் வந்தார். விருத்தாசலம் அருகே உள்ள காவல் நிலையத்தில் பேருந்தை நிறுத்துமாறு கூறினார். காவல் நிலையம் அருகே பேருந்து நிற்காமல் சென்றதால் ஆத்திரமடைந்த வனஜா கண்டக்டர் பாலமுருகன்(20)னை திட்டியதோடு கடுமையாகத் தாக்கியுள்ளார். பேருந்து ஊழியர்கள் போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2251. | 05.09.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூரை அடுத்த கொணவட்டம், மற்றும் முள்ளிப்பாளையம் இருந்து விநாயகர் சிலைகளை சதுப்பேரி எரியில் கரைப்பதற்கு சென்றபோது மேளம் அடிக்ககூடாது என ஒரு தரப்பினர் கூறியதால் இரு தரப்பினர் இடையே மோதல். காவல் துறையினர் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2252. | 06.09.2011 | **மதுரை மாவட்டம்:** கொன்னவாயன் சாலையைச் சேர்ந்த முத்துராஜ் அரிசி கடை நடத்தி வந்தார். இரவு கடையை அடைத்து மறுநாள் திறக்கும்போது அவரது கடையில் இருந்து 25 கிலோ எடைகொண்ட 40 மூட்டை அரிசி திருடப்பட்டுள்ளதாக புகார். | அரிசி கடத்தல் | தினத்தந் தி |
| 2253. | 06.09.2011 | **நெல்லை மாவட்டம்:** அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த கண்ணபிரான்(35) இவர் திருவண்ணாமலை செய்யாறு தாலுகாவில் உள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர். இரண்டு மனைவிகள் உள்ள நிலையில் அப்பள்ளியில் படிக்கும் 13 வயது மாணவியை மிரட்டி கடத்திச் சென்று கட்டாய தாலி கட்டியதாக ஆசிரியர் கண்ணாபிரன் மீது புகார். | வகுப்பறை வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந் தி |
| 2254. | 07.09.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு நபிஷா நகரைச் சேர்ந்த ரமேஷ்குமார் மனைவி உஷாராணி(35). கணவன் மனைவி இருவரும் இருசக்கர வாகனத்தில் | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந் தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேலூருக்கு சென்று ஆற்காடு திரும்பும் வழியில் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் உஷாராணியை அரிவாளால் வெட்டிக் கொலை. | | |
| 2255. | 07.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தில் உள்ளே கீழப்பள்ளிவாசலில் பதுக்கிவைக்கப்பட்ட 40 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். முகமது ரபீக், ஜான், உசேன் 3 பேர் கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 2256. | 07.09.2011 | **தஞ்சை மாவட்டம்:** கும்பகோணம் அருகே கோவிந்தபுரம் அக்ராஹாரத்தைச் சேர்ந்த பார்த்தசாரதி(49). தனது தாயார் தனக்கு செட்டில்மென்டாக எழுதிக்கொடுத்த இடத்திற்கு தனது பெயருக்கு பட்டா கோரி தாலுகா அலுவலகத்தில் மனு. வி.ஏ.ஓ., ரவிக்குமார்(55) பட்டா மாற்றத்திற்கு ரூபாய் 4000 லஞ்சம் கேட்டதாக பார்த்தசாரதி புகார். | லஞ்சம் | தினமலர் |
| 2257. | 07.09.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி மத்திய சிறையில் கைதிகளுக்கு பீமாநகர் டி.எம்.ஐ., என்ற தொண்டு நிறுவனம் கேட்டரிங் பயிற்சி கொடுத்தது. கேட்டரிங் பாடம் நடத்திய கன்னியாஸ்திரி ஜோஸ்வாமேரியை ஆயுள் தண்டனை கைதி ராஜேஷ்(40) கத்தரிக்கோலால் கழுத்தை அறுத்துக் கொலை செய்ய முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>கொலை முயற்சி<br>&<br>சிறைச்சாலை வன்முறை | தினமலர் |
| 2258. | 07.09.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை வள்ளியூரை அடுத்துள்ள சின்னம்மாள்புரத்தில் கிரெயில் டிரஸ்ட் என்ற காப்பத்தில் 23 சிறுவர்கள், 10 சிறுமிகள் உள்ளனர். சிறுவர் காப்பகத்துக்கு பண உதவி செய்யும் பிரிட்டனை சேர்ந்த பாதிரியார் ஜோனாதன்ராவின்சன் நடத்தி வந்தார். இவர் இந்தியா வரும் பொழுது இங்குள்ள மாணவர்களிடம் பாலீயல் ரீதியா தவறாக நடந்ததாகப் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2259. | 08.09.2011 | **சேலம் மாவட்டம்:** ஓமலூர் அருகே உள்ள பனங்காட்டைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் மனைவி வனிதா(21). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ஜெகதீஸ்வரன் பிறந்து 40 நாட்களுக்கும் ஆன ஆண்குழந்தையை அடித்துக் கொலை செய்ததாக புகார். | சிசுக்கள் மீதான வன்முறை<br>&<br>கொலை முயற்சி | தமிழ்முரசு |
| 2260. | 08.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் பழைய செம்பட்டியைச் சேர்ந்த தஞ்சாவூர் ஆயுதப்படை காவலர்கள் மணிகண்டன். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அயனாவரத்தைச் சேர்ந்த திவ்யா இருவரும் காதலித்தனர். திவ்யாவை திருமணம் செய்துக் கொள்வதாக ஆசை வாாத்தை கூறி பாலியல். திவ்யா கர்ப்பம். மணிகண்டன் திருமனத்திற்கு மறுப்பதாக திவ்யா புகார். | | |
| 2261. | 08.09.2011 | **நாமக்கல் மாவட்டம்:** ராசிபுரம் அருகே கட்டாணாச்சம்பட்டி 1 வது வார்டு அண்ணாநகர் காலனியைச் சேர்ந்த சங்கர் மனைவி சங்கீதா(22). மகன் ராகுல்(2). சங்கரின் அம்மா ஜெயம்மாளுக்கும் அதே பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணிக்கும் தொடர்பு. தனது கள்ளக்காதலுக்கு குழந்தை தடையாக இருப்பதாக நினைத்து சுப்பிரமணி குழந்தையைக் கொலை செய்ததாக புகார். சுப்பிரமணியன் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 2262. | 08.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை தண்ணீர்குப்பத்தைச் சேர்ந்த சின்னத்துரை(25). மதுரையைச் சேர்ந்த மாலா என்ற மாரீஸ்வரிக்கும் திருமணம் நடைபெற இருந்த நேரத்தில் இரவு மாப்பிள்ளை தலைமறைவு. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2263. | 08.09.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகேயுள்ள பொக்குளிப்பட்டியைச் சுகபிரபு(24) அதே பகுதியைச் சேர்ந்த அன்னலெட்சுமி(22) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்துவதாக அன்னலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2264. | 08.09.2011 | **மதுரை மாவட்டம்:** நாகமலை புதுக்கோட்டை தனியார் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் போதைப்பொருள் உபயோகிப்பதாக புகார். வடிவேல் கரையில் இருந்து பள்ளிக்கு வந்து படிக்கும் மாணவர்களை ஆசிரியர்கள் முழங்கால் போடச் செய்து மாணவர்களை சோதனை செய்ததால் மாணவர்களின் பெற்றோர் ஆசிரியர்களை கண்டித்து பள்ளியை முற்றுகை. | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 2265. | 08.09.2011 | **நெல்லை மாவட்டம்:** விஜயநாராயணம் அருகே கைலாசநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த சேர்மத்துரை(45) மகன் சுதர்சன்(5). விஜயநாராயணம் அருகே 200 அடி ஆழமுள்ள ஆழ்துறை கிணறு தோன்டப்பட்டு மூடப்படாமல் இருந்த நிலையில் ஆழ்துளை கிணற்றில் சுதர்சன் தவறிவிழுந்து மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2266. | 09.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்த வசந்தி(34) மர்மமான முறையில் மாயம். வழக்கு பதிவு செய்து நடவடிக்கையும் எடுக்காமல் சென்னை மாநகராட்சி மற்றொரு நோயாளியை அந்த அறையில் அமர்த்தியுள்ளனர். | பெண்கள் மீதான வன்முறை | கலைஞர் டிவி |
| 2267. | 09.09.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் அருகே உள்ள மணிகட்டி பொட்டல் பகுதியைச் சேர்ந்த ராஜசேகரின் 17 வயது மகள். தனது மகளை வைராவிளை பகுதியைச் சேர்ந்த வாலிபர் கடத்திச் சென்றதாக புகார் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என எஸ்.பியிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் & காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 2268. | 09.09.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** ஆரல்வாய்மொழி குமாரபுரம் காலனி பகுதியைச் சேர்ந்த கனகராஜ் மனைவி விஜலெட்சமி(26). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த கனகராஜ் விஜலெட்சுமி கழுத்தை நெறித்துக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தமிழ்சுடர் |
| 2269. | 9.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி முத்தையாபுரம் ராஜீவ் நகரைச் சேர்ந்த ஜேசுராஜ்(24) மனைவி நிர்மலா(33). ஜேசுராஜ் தினமும் குடித்துவிட்டு வந்து போதையில் அடிப்பதாக நிர்மலா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 2270. | 9.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனியை அருகே நெய்க்காரபட்டி கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி தனது நிலத்திற்கு மின் இணைப்பு கேட்டு கிராம நிர்வாக அலுவலர் துரைராஜ்(29)யை அணுகினார். அவர் ரூபாய் 2,500 லஞ்சம் கேட்டதாக கிருஷ்ணசாமி புகார். | லஞ்சம் | தினமணி |
| 2271. | 9.09.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டியைச் சேர்ந்த மொக்கராஜின் மகள் நித்யா(27). மதுரை ஜெய்ஹிந்த்புரம் பகுதியைச் சேர்ந்த சென்ராயன் தனது மகளைக் கடத்திச் சென்றதாக மொக்கராஜ் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |
| 2272. | 9.09.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** உலக எழுத்தறிவு தினம் பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டது. பள்ளி மாணவ, மாணவிகளின் பேரணி நடைபெற்றது. விழுப்புரத்தில் இப்பேரணியை தொடக்கி வைக்க மணிமேகலை வருவதாக அறிவிப்பு. நீண்ட நேரமாக 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலெக்டர் வருகைக்காக வெயிலில் காத்திருப்பு. | குழந்தைகள் மீதான வன்முறை & வகுப்பறை வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2273. | 9.09.2011 | **மதுரை மாவட்டம்:** புதூர் ரேஸ்கோர்ஸ் காலனியைச் சேர்ந்த உதயசூரியன்(43) எஸ்.பி அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிகிறார். உதயசூரியன் திருமங்கலம் அருகே நேசநேரியைச் சேர்ந்த வீரபத்திரன் மகன் சுரேஷ்குமார், மகள் முத்துப்பேச்சி, உறவினர்கள் தங்கராஜ், முனியாண்டி, முருகன், சரவணன், இவர்களுக்கு போலீஸ் வேலை வாங்கித் தருவதாக ரூ. 4லட்சத்து 85 ஆயிரம் மோசடி செய்ததாக உதயசூரியன் கைது. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2274. | 9.09.2011 | **சேலம் மாவட்டம்:** ஒவ்வொரு நர்சரி பள்ளியும், மூன்றாண்டுக்கு ஒரு முறை, உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் மூலம், பள்ளிக்கான அங்கீகாரச் சான்றை பெற வேண்டும். சங்ககிரியில் உள்ள, பிரைட்சன் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி தாளாளர் பூங்கோதை, அங்கீகாரச் சான்று வேண்டி மழலையர் மற்றும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பாலு (எ) பாலசுப்பிரமணியனை அணுகினார். அவர் ரூபாய் 5,000 லஞ்சம் கேட்டதாக புகார். பாலு கைது. | லஞ்சம் | தினமலர் |
| 2275. | 10.09.2011 | **திருச்சி மாவட்டம்:** கரூர் அருகே உள்ள மருத்துவமனையில் சின்னப்பன் என்பவருக்குத் தவறான சிகிச்சை அளித்ததால் உடலில் ஊனம் ஏற்பட்டது. எனவே இதனால் மனம் உடைந்த சின்னப்பன் மருத்துவமனை வளாகம் முன்பு தீக்குளிக்க முயற்சி. | மருத்துவர்கள் அலட்சியம் | கலைஞர் டிவி |
| 2276. | 10.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் தாலுகா, பன்னீர்குண்டு கிராமத்தைச் சேர்ந்த பெரியகுருசாமி. தனது அண்ணன் மகள் கருப்புத்தாயை மற்றும் அவரது 10 மாத குழந்தையுடன் காணவில்லை என பெரியகுருசாமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2277. | 10.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் விளாச்சேரி அருகே அரிசிவன் நகரைச் சேர்ந்த நாகூர்கனி மகள் சோபியா(14). அதே பகுதியைச் சேர்ந்த மாயக்கண்ணன், ராஜ்வெங்கட் மற்றும் பர்மா காலனியைச் சேர்ந்த இமான் மூவரும் சோபியாவை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்ததாகப் புகார். மாயக்கண்ணன், ராஜ்வெங்கட் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2278. | 10.09.2011 | **மதுரை மாவட்டம்:** பழங்காநத்தம் பகுதியைச் சேர்ந்த பஞ்சம்மாள். இவரது ஒன்றரை வயது பேத்தியை அதே | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பகுதியைச் சேர்ந்த 13 வயது மாணவன் பாலியல் பலாத்காரம். மாணவன் கைது. | | |
| 2279. | 10.09.2011 | **மதுரை மாவட்டம்:** தெற்குவாசல் போலீஸ் ஸ்டேஷன் அருகில் பிளாஸ்டிக் பையில் இறந்த நிலையில் பெண் சிசு கிடந்ததாக புகார். | சிசுக்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2280. | 10.09.2011 | **நெல்லை மாவட்டம்:** ஊத்துமலை அருகே பலபத்திராமபுரம் பஞ்சாயத்துக்குட்பட்ட கங்கணாங்கிணறு கிராமத்தில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள அரிஜன நடுநிலைப்பள்ளியில் பயிலும் முத்துராஜ்(11), ராதா(9), பாலகிருஷ்ணன்(9), ஆறுமுகத்தாய்(9), திருமேனி(11), மகராஜன்(9), கவிதா(9), திருமேனி(11). மாணவர்களை பள்ளிக்குச் செல்லும் வழியில் மர்ம நபர்கள் காரில் கடத்திச் செல்ல முயற்சி. பொதுமக்கள் குழந்தைகளை மீட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் முயற்சி | தினகரன் |
| 2281. | 10.09.2011 | **சென்னை மாவட்டம்:** பெருங்களத்தூர் நடுங்குன்றம் காந்தி ரோட்டைச் சேர்ந்த சந்துரு(32) மாற்றுத்திறனாளி. சந்துருவின் தம்பி சூர்யாவை காவலர்கள் கொலை வழக்கு தொடர்பாக கைது செய்தனர். சந்துருவின் வீட்டிற்கு விசாரணைக்கு வந்த காவலர்கள் வீட்டில் இருந்த சந்துருவின் தாய் தனலெட்சுமியை அடித்ததோடு தரக்குறைவாக பேசியதால் மனமுடைந்த சந்துரு காவலர்கள் முன்னிலையில் மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டுத் தற்கொலை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2282. | 11.09.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சியில் இருந்து செமணாம்பதி வழியாக கேரளாவுக்கு ஆட்டோவில் கடத்த இருந்த 300 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி பறிமுதல் | தீக்கதிர் |
| 2283. | 11.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** வத்திராயிருப்பு ஒன்றியத்திற்குட்பட்ட வலையங்குளம் பகுதியில் வசிக்கும் அருந்ததியர் மக்களுக்கு தனியாக சுடுகாடு கட்டப்பட்டு வருகிறது. சுடுகாட்டிற்கு செல்ல சரியான பாதை இல்லை எனவும் சரியான பாதை அமைத்துத் தருமாறு அருந்ததியர் மக்கள் போராட்டம். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2284. | 11.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம் மண்டலமாணிக்கம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட எம். பச்சேரி கிராமத்தில் வசிக்கும் தலித் சமுகத்தைச் சேர்ந்த தங்கவேல் மகன் | தலித்துகள் மீதான வன்முறை & கொலை | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பழனிக்குமார்(16). மண்டலமாணிக்கம் அருகே ஆனைக்குளத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 படித்து வருகிறார். எம்.பச்சேரியை அடுத்த முத்துராமலிங்கவுரம் புதூரில் ஸ்ரீ கருப்பணசுவாமி கோயில் திருவிழாவிற்கு சென்ற இரவு திரும்பும் வழியில் பழனிக்குமாரை ஆதிக்கச் சமூகத்தினர் வெட்டிக் கொலை. இக்கொலை தொடர்பாக ஆறுமுகம், கருப்பையா, பச்சமால், மணிகண்டன், ஆபுத்திரன் ஆகிய 5 பேர் கைது. | | |
| 2285. | 11.09.2011 | **சென்னை மாவட்டம்:** நித்தியானந்தா, நடிகை ரஞ்சிதா, சம்பந்தப்பட்ட சிடி. தொடர்பான வழக்கில் சன் பிக்சர்ஸ் சக்சேனாவையும், பட வினியோகஸ்தர் அய்யப்பனையும் சன் பிக்சர் கலாநிதிமாறனுக்கு எதிராக பொய் வாக்குமூலம் அளிக்குமாறு சிபிசிஐடி காவலர்கள் அடித்துச் சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2286. | 11.09.2011 | **மதுரை மாவட்டம்:** தல்லாகுளத்தைச் சேர்ந்த முகம்மது ரபீக் தொண்டு அமைப்பின் உதவியாளர். இதே அமைப்பின் ஊழியர் பெரியநாயகத்தை முகம்மது ரபீக் சாதியைச் கூறி இழிவாக பேசியதோடு, அடித்துத் துன்புறுத்தியதாக பெரியநாயகம் புகார். | சிறுபான்மையினோர் மீதான வன்முறை | தினகரன் |
| 2287. | 11.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** சாத்தான்குளம் அருகே பழங்குளத்தைச் சேர்ந்த யேசுதாசன் இவரது மாட்டுத்தொழுவத்தில் மண்பானையில் தொப்புள்கொடி அறுக்கப்படாத நிலையில் பிறந்து சில மணிநேரங்களே ஆன ஆண் குழந்தை கிடந்தாக புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2288. | 11.09.2011 | **வேலூர் மாவட்டம்:** போ்ணாம்பட்டு அடுத்த சொக்கரிஷி குப்பத்தைச் சேர்ந்த பாபு மகள் ஜெயப்பிரியா(20). எதிர் வீட்டில் வசிக்கும் ஹரிஷ்(23) தன்னை திருமணம் செய்துக் கொள்ளுமாறு ஜெயப்பிரியாவை கட்டாயப்படுத்தியதோடு கொலை மிரட்டல் விடுத்ததாக ஜெயபிரியா புகார். ஹரிஷ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2289. | 11.09.2011 | **மதுரை மாவட்டம்:** குலமங்கலம் மெயின்ரோட்டைச் சேர்ந்த சுந்தரராஜ் மகள் ரமா(17). நரிமேட்டில் உள்ள பெண்கள் கல்லூரியில் பி.எஸ்சி., முதலாமாண்டு மாணவி. கல்லூரிக்குச் சென்ற மாணவியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2290. | 12.09.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** மரக்காணம் | குழந்தைகள் மீதான | தினத்தந் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருகே கரிப்பாலையம் பகுதியைச் சேர்ந்த அய்யனார் மகள் ரேகா(3). அதே பகுதியைச் சேர்ந்த லெட்சுமிநாராயணன்(18), ராஜா(18), கார்த்திக்(18) மூவரும் ரேகாவின் காலில் கிடந்த வெள்ளிக்கொலுசு மற்றும் தோடுக்காக ஆசைப்பட்டு ரேகாவை அருகில் உள்ள குட்டையில் அமுக்கி கொலை செய்ததாக மூவரும் கைது. | வன்முறை & கொலை | தி |
| 2291. | 12.09.2011 | **மதுரை மாவட்டம்:** சிவகங்கை மாவட்டம் பாட்டம் கிராமத்திலிருந்து லாரியில் 40–க்கும் மேற்பட்டோர் மதுரை சிந்தாமணி சுற்றுச்சாலை வழியாக வந்தபோது சிந்தாமணி சோதனைச்சாவடியில் இருந்து காவலர்களுக்கும், லாரியில் இருந்தவர்களுக்கும் இடையே மோதல். காவலர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் படுகாயம். | தலித்துகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை & துப்பாக்கிச் சூடு | தினமணி |
| 2292. | 12.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தூத்துக்குடியில் இருந்து பரமக்குடிக்கு வரமுயன்ற தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜான்பாண்டியனை காவலர்கள் வல்லநாடு அருகே கைது செய்தனர். இதனை எதிர்த்து அவரது ஆதரவாளர்கள் பரமக்குடி ஐந்துசாலையில் சாலை மறியல். காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 8 பேர் மரணம். | காவல் நிலையச் சித்திரவதை & துப்பாக்கிச் சூடு | தினமணி |
| 2293. | 12.09.2011 | **மதுரை மாவட்டம்:** ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் வசிக்கும் சண்முகம் மனைவி மகாலெட்சுமி. மணிநகரத்தைச் சேர்ந்த பாஸ்கரன் என்பவரிடம் ரூ. 25 ஆயிரம் கடன் வாங்கினர். சண்முகம் மற்றும் மகாலெட்சுமி இருவரும் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றியதால் பாஸ்கரனின் அண்ணன் திருப்பதிராஜன் கணவன் மனைவி இருவரையும் கடத்தியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2294. | 12.09.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகேயுள்ள புதுப்பட்டியைச் சேர்ந்த வல்லவன் வெளிநாட்டில் வேலை செய்தார். வல்லவனின் மனைவி வேல்மணி, மகன்கள் ஜீவா, பகவதி. மூவரையும் வல்லவனின் நண்பர் சீமான் கடத்தியதாக வல்லவன் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2295. | 13.09.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அரசு | குழந்தைகள் மீதான வன்முறை | கலைஞர் டிவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மருத்துவமனையில் சுரேஷ், மோகனபிரியா, தம்பதியினரின் 11/2 வயது குழந்தை மரணமடைந்தது. அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லை. மருத்துவர்களின் அலட்சியத்தால் குழந்தை இறந்தது என்று பெற்றோர் மற்றும் உறவினர்கள் மருத்துவமனையை முற்றுகையிட்டனர். | & மருத்துவர்கள்அலட்சியம் | |
| 2296. | 13.09.2011 | **தேனி மாவட்டம்:** தேனி ரங்கசமுத்திரத்தில் பிற்பட்டோர் மாணவர் விடுதி சமையலர் வெங்கிடசாமி(5). விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் உதயகுமார், பாக்கியராஜ் உட்பட 8 மாணவர்களை வெங்கிடசாமி, தரக்குறைவாக திட்டியதோடு, கையில் கிடைத்த பொருளால் தாக்கியதாகப் புகார். வெங்கிடசாமி பணியிடைநீக்கம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2297. | 13.09.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் நகராட்சியில் அமைந்துள்ள அங்கான்வாடி மையத்தில் 29 குழந்தைகள் உள்ளனர். அங்கான்வாடியில் அடிப்படை வசதியில்லாமலும், நகராட்சி இலவச கழிப்பறை அருகிலும் அங்கான்வாடி மையம் செயல்பட்டு வருவதாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2298. | 13.09.2011 | **மதுரை மாவட்டம்:** நெடுமதுரை கண்மாயில் தொடர்ந்து டிராக்டர் மற்றும் லாரிகள் மூலம் மணல் திருட்டு நடைபெறுவதாகப் புகார் கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என நெடுமதுரை கிராம குடிநீர் தொட்டி ஆப்பரேட்டர் தெய்வேந்திரன் புகார். | மணல் கொள்ளை | தினமலர் |
| 2299. | 13.09.2011 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த தனசேகரன் மகள் நித்யா(16). அருகில் வசிக்கும் மாணவரை காதலித்ததால் பெற்றோர் கண்டித்தனர். இதனால் மனமுடைந்த நித்யா தூக்கிட்டுத் தற்கொலை. | குழந்தை மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 2300. | 13.09.2011 | **தேனி மாவட்டம்:** மேகமலை ஊராட்சிக்குட்பட்ட இந்திரா நகரைச் சேர்ந்த அம்பிகா. தனது கணவர் இறப்பிற்கு சமூக பாதுகாப்புத்திட்டத்தில் நிதி உதவி வழங்குமாறு விண்ணப்பித்தேன். தனக்கு வந்த பணத்தை சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் மாதேஸ்வரன் மற்றும் இடைத்தரகர்கள் சேர்ந்து வேறு ஒரு பெண்ணை வைத்து தனக்கச் சேர | பெண்கள் மீதான வன்முறை & மோசடி | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய பணத்தை வாங்கி மோசடி செய்ததாக புகார். | | |
| 2301. | 13.09.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி அருகே உள்ள அமராவதி புதூரில் சமத்துவபுரம் அருகே ரோட்டில் தன் தாயுடன் தூங்கிக் கொண்டிருந்த 4 வயது சிறுமியை மர்ம நபர் பாலியல் பலாத்காரம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 2302. | 13.09.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை கழுக்காணி முட்டம் பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன் மகள் திவ்யா(23). சிதம்பரம் அருகே உள்ள முட்லூர் பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் திவ்யாவை கடத்திச் சென்றதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினசூரியன் |
| 2303. | 13.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே செம்பட்டி என்.ஜி.ஓ. காலனியில் வசிக்கும் பூமிநாதன் மகள் சரவணக்கனி(17). வேலைக்கு சென்ற திரும்பும் வழியில் சரவணக்கனியை செம்பட்டியைச் சேர்ந்த முத்துக்குமரன், கருப்பசாமி, விநாயகம் கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம். மூவரும் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினசூரியன் |
| 2304. | 14.09.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை காமராசர் சாலை நவரத்தினபுரம் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் மனைவி துர்க்காதேவி(32) மகன் ஸ்ரீராம்(5). வீட்டில் தனியாக இருந்த துர்க்காதேவியை மர்ம நபர்கள் கொலை செய்ததோடு நகை மற்றும் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினசூரியன் |
| 2305. | 14.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை அடுத்த சுங்குவார்சத்திரம் அருகில் செல்லம்பட்டறை என்ற கிராமத்தில் வசிக்கும் நடிகை விசித்ராவின் தாய் வசந்தா(65), தந்தை வில்லியம்ஸ்(70). வீட்டில் தனியாக இருந்த வசந்தா மற்றும் வில்லியம்ஸ் இருவரையும் மர்ம நபர்கள் தாக்கியதில் தந்தை மரணம். நகை மற்றும் பணத்தைக் மர்ம நபர்கள் கொள்ளை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினசூரியன் |
| 2306. | 14.09.2011 | **மதுரை மாவட்டம்:** காமராஜர்புரம் பகுதியிலுள்ள 9ம் எண் ரேசன் கடையில் அதிகாரிகளின் சோதனையில் போது 220 கிலோ பாமாயில் எண்ணெய், 330 கிலோ ரேசன் அரிசி இருப்பில் குறைவாக இருந்தாக அதிகாரிகள் புகார். கடையில் மோசடி செய்ததாக விற்பானையாளர் பெருமாள் கைது. | மோசடி | தினமணி |
| 2307. | 14.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேஸ்வர மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த | மீனவர்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | போது இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களின் வலைகளை வெட்டிவிட்டு மீன் பிடிக்கவிடாமல் துரத்தி விட்டதாக பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் புகார். | | |
| 2308. | 14.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதியை அடுத்துள்ள பச்சேரி கிராம பொது மக்கள் பயன்படுத்தும் குடிநீர் கிணற்றில் விஷம் கலந்துள்ளதாக கிராம மக்கள் புகார். மண்டல மாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த 57 பேர் மீது காவலர்கள் வழக்கு. | – | தமிழ்சுடர் |
| 2309. | 14.09.2011 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் கருப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த வைரப்பன் மகள் இந்துமதி. தனது மகளின் திருமண உதவித் தொகை கேட்டு சமூக நல விரிவாக்க அலுவலர் ஏ. புனிதவதியை அணுகினார். அவர் ரூ. 1200 லஞ்சம் கேட்டதாக வைரப்பன் புகார். | லஞ்சம் | தமிழ்சுடர் |
| 2310. | 14.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** மதுரை புதூர் கன்னிமாரியம்மன் கோயில் 3வது தெருவில், பாண்டியன் கூட்டுறவு அங்காடி சார்பில் ரேஸ்கோர்ஸ் கிளை ரேசன் கடை கடந்த 1 ந்தேதி முதல் 13 ம்தேதி வரை பூட்டிக் கிடந்ததால் பொதுமக்கள் கடையைத் திறக்ககோரி முற்றுகை. | –– | தினகரன் |
| 2311. | 15.09.2011 | **மதுரை மாவட்டம்:** கோ.புதூரை அடுத்த சம்பக்குளத்தைச் சேர்ந்த பாண்டி மனைவி புவனேஸ்வரி.(27). இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த புவனேஸ்வரி தூக்கிட்டுத் தற்கொலை. மனைவியை தற்கொலைக்கு தூண்டியதாக பாண்டி கைது. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை & தற்கொலை | தினத்தந்தி |
| 2312. | 15.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் கான்சாபுரத்திலிருந்து வ. புதுப்பட்டி வழியாக அரசு பேருந்து வந்தது. பேருந்தில் எறிய ஸ்ரீவி. ஆர்.சி.உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு மாணவர் கவியரசன்(16). ஸ்ரீவி.சி.எம்.எஸ்., பள்ளி 9ம் வகுப்பு மாணவர் பிரதாப்(16), பிளஸ் 2 மாணவர் பிரசாதி(16) மூவருக்கும் தகராறு. பஸ் ஸடாண்டு காவலர்கள் மாணவர்கள் மீது தடியடி. | குழந்தைகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2313. | 15.09.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே வலையபட்டியைச் சேர்ந்த ஆசிரியர் மாலா. வலையபட்டியைச் சேர்ந்த ரமேஷ், மகாலெட்சுமி, ஜான்சி, அன்புச்செல்வி, மற்றும் ஆனந்த் ஆகியோரிடம் மாலா | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடன் வாங்கியிருந்தார். வாங்கிய பணத்தை விட கூடுதலாக பணம் கொடுத்தும் 5 பேரும் தன்னை மிரட்டுவதாகவும். அன்புச்செல்வியின் கணவர் காவலர் குணபாலன் தன்னை மிரட்டுவதாக மாலா புகார். | & கந்துவட்டிக் கொடுமை | |
| 2314. | 15.09.2011 | **சிவகங்கை மாவட்டம்:** ராகிணிப்பட்டியைச் சேர்ந்த வேலு மகள் உமா(17). உமாவுக்கும் ராகினிப்பட்டியைச் சேர்ந்த ஒருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாகவும், மேஜர் ஆகாமலே தனது மகளை திருமணம் செய்து வைக்க உறவினர்கள் முயற்சிப்பதாக வேலு புகார். | குழந்தைத் திருமணம் | தினகரன் |
| 2315. | 16.09.2011 | **சேலம் மாவட்டம்:** சேலத்தில் ரோட்டில் நடந்துச் சென்ற பெண்ணிடம் நகை பறித்த மதுரையைச் சேர்ந்த சப்பாணி முருகன்(29) மற்றும் அவரது மனைவி மதி கைது. தனது கூட்டாளி வெங்கடேசனை நகைக்காக கொலை செய்ததாக முருகன் வாக்குமூலம். | பெண்கள் மீதான வன்முறை & நகை பறிப்பு | தமிழ்முரசு |
| 2316. | 16.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு அருகே உள்ள நாகலாபுரத்தைச் சேர்ந்த அபுபக்கர் மனைவி மகமுதா(40) வத்தலக்குண்டு அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியை. பணி முடிந்து திரும்பும் வழியில் இருச்சக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர் மகமுதாவின் நகையை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & நகை பறிப்பு | தமிழ்முரசு |
| 2317. | 16.09.2011 | **மதுரை மாவட்டம்:** கச்சத்தீவு அருகே மீன் பிடித்த ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையில் வழிமறித்து விரட்டியடிப்பு. | மீனவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2318. | 16.09.2011 | **மதுரை மாவட்டம்:** விக்கிரமங்கலம் அருகே அய்யப்பன்பட்டியைச் சேர்ந்த மைனர் பெண்ணை. அதே பகுதியைச் சேர்ந்த உக்கிரபாண்டி(23) என்பவருக்கு திருமணம் செய்ய முயற்சி. அரசு அதிகாரிகள் இந்த திருமணத்தை தடுத்து நிறுத்தினர். | குழந்தைத் திருமணம் தடுப்பு | தினமலர் |
| 2319. | 17.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு அருகே உள்ள நெல்லூர் கிராமத்தைச் சேர்ந்த ஈஸ்வரி மகன் குபேந்திரன்(26). தன்னுடைய தாய் குடிப்பதற்கு பணம் தர மறுத்ததால் ஆத்திரமடைந்த குபேந்திரன் ஈஸ்வரியை கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தீக்கதிர் |
| 2320. | 17.09.2011 | **சேலம் மாவட்டம்:** சேலத்தில் 150 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட சூப்பர் | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஸ்பெஷாலிட்டி அரசு மருத்துவமனையை மூடியதைக் கண்டித்து போராட்டம் நடத்திய இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத் தோழர்கள் மீது காவல்துறை தடியடி. | | |
| 2321. | 17.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** நாகையைச் சேர்ந்த யோகராஜ் பரமக்குடியில் உள்ள உறவினர் வீட்டிற்கு வந்தார். இமானுவேல் நினைவு தினத்தில் நடந்த கலவரத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த யோகராஜ் மீது காவலர்கள் துப்பாக்கிச்சூடு. யோகராஜ் காலில் குண்டு பாய்ந்து மருத்துவமனையில் சிகிச்சை. | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2322. | 17.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகேயுள்ள மருத்தூர் கிராமத்தைச் சேர்ந்த வீ.பாண்டி. பரமக்குடியில் குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்க பரமக்குடி வந்தார். அங்கு இமானுவேல் சேகரன் நினைவு தினத்தன்று ஏற்பட்ட கலவரத்தில் பாண்டி மீது காவலர்கள் அடித்துச் சித்திரவதை. பாண்டி மருத்துவமனை சிகிச்சை. | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2323. | 17.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரத்தைச் சேர்ந்த காளிமுத்து மகன் பாண்டி. பரமக்குடி வீதியில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பாண்டியை காவலர்கள் தடியடி. பாண்டி மருத்துவமனையில் சிகிச்சை. | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2324. | 17.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே உள்ள எஸ். ஆண்டக்குடி என்ற ஊரைச் சேர்ந்த ஆறுமுகசாமி. பரமக்குடியில் நடந்த கலவரத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஆறுமுகசாமி மீது காவலர்கள் தடியடி. ஆறுமுகசாமி மருத்துவமனையில் சிகிச்சை. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2325. | 17.09.2011 | **தருமபுரி மாவட்டம்:** பெங்களூர். பொம்மனஹள்ளி பகுதியில், பேக்கரிகளுக்கு பிரட், பிஸ்கட், சுவீட் தயாரிக்கும் நிறுவனத்தில் ஓராண்டுக்கும் மேலாக கொத்தடிமையாக இருந்த திருவண்ணாமலை, தர்மபுரி பகுதியைச் சேர்ந்த 10 சிறுவர்கள் மீட்பு. | கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்பு | தினமலர் |
| 2326. | 17.09.2011 | **நெல்லை மாவட்டம்:** சங்கரன்கோயில் அருகே கரிவலம் வந்தநல்லூர் பகுதியில் நிட்சேபநதி ஆற்றில் அனுமதியின்றி மணல் அள்ளிய சொக்கலிங்கபுரத்தைச் சேர்ந்த பரமன், முருகன் ஆகியோர்களுடன் 15 பேர்களையும் | குழந்தைகள் மீதான வன்முறை & மணல் கொள்ளை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூலிக்கு மணல் அள்ள அழைத்துச் சென்றனர். உயரமான பகுதியில் மணல் அள்ளும் போது மணல் சரிந்ததில் சண்டுகராஜ்(14), மரணம். | | |
| 2327. | 17.09.2011 | **மதுரை மாவட்டம்:** விக்கிரமங்கலம் வடுகப்பட்டியைச் பாண்டி மனைவி தேடாசெல்வம்(35). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த தேடாசெல்வம் தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 2328. | 17.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை துரைப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த 16 வயது பள்ளி மாணவர். இவர் தனது பெற்றோருடன் நான்கு சக்கர வாகனத்தில் பயணித்தபோது, அங்கிருந்த போக்குவரத்துக் காவலர் வாகனத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளார். இது குறித்து விசாரித்துக் கொண்டிருந்த மாணவரின் பெற்றோரிடம் காவலர் 1000 ரூபாய் லஞ்சம் கேட்டுள்ளார். இச்சம்பவத்தை தனது மொபைல் போன் மூலம் வீடியோ எடுத்துள்ளார் மாணவர். இதைப் பார்த்த காவலர் மாணவனை கடுமையாக தாக்கி சித்திரவதை. பெற்றோர் மாநகர ஆணையாளரிடம் புகார். | லஞ்சம் & காவல் நிலையச் சித்திரவதை | டெக்கான் கிரானிக்கல் |
| 2329. | 17.09.2011 | **சிவகங்கை மாவட்டம்:** நாமனூர் ரவிக்குமார் மகன் அழகுமுருகன்(16). அழகமாநரில் அரசு மேல்நிலைப்பள்ளியில் 10–ம் வகுப்பு படித்து வந்தார். 3 நாட்களாக வீட்டுப்பாடம் எழுதவில்லை என்பதால் வகுப்பாசிரிருக்கு பயந்து பள்ளி அருகில் உள்ள மரத்திற்கு பின் மாணவன் அழகுமுருகன் மறைந்திருந்த போது மரத்தில் இருந்து விழுந்து மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2330. | 17.09.2011 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் பகுதி கோடியக்கரைக்கு தென்கிழக்கே வேதாரண்யத்தைச் சேர்ந்த ஆறுகாட்டுத்துறை மற்றும் நாகை மீனவர்கள் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையிகர் விரட்டியதாக பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2331. | 18.09.2011 | **மதுரை மாவட்டம்:** டோக்நகர் 2 வது தெரு குறுக்குத் தெருவைச் சேர்ந்த ராமநாதன் மனைவி மாலதி(62). வீட்டில் தனியாக இருந்த மாலதியிடம் ரேசன் கார்டு சரிபார்க்க வந்ததாக கூறி மர்ம நபர்கள் 2 பேர் மாலதியின் 8 பவுன் நகையைப் பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2332. | 18.09.2011 | **மதுரை மாவட்டம்:** காமராஜர் பல்கலை | பெண்கள் மீதான | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நகரைச் சேர்ந்த ஜெயபாண்டி மனைவி இலக்கியபிரியா(27). குடிபோதையில் கூடுதல் வரதட்சணை வாங்கி வரும்படி இலக்கியபிரியாவை துன்புறுத்தியதோடு கொலை செய்ய முயன்றதாக ஜெயபாண்டியன் மீது இலக்கியபிரியா புகார். | வன்முறை & கொலை முயற்சி | |
| 2333. | 18.09.2011 | **மதுரை மாவட்டம்:** விருதுநகர் மாவட்டம் சிவகாசி மேற்கு பகுதியைச் சேர்ந்த லட்சுமி(65), மதுரை தெற்குவாசலலைச் சேர்ந்த பாண்டி(65), செல்லூர் கணபதி(70), வடக்கு ஆவணி மூலவீதுயைச் சேர்ந்த வக்கீல் வாசுதேவன்(60), மற்றும் ஊர், பெயர் தெரியாத 65 வயது தக்க முதியவர் உள்பட 5 பேர் மதுரை அரசு மருத்துவமனை மற்றும் செல்லூர் பகுதியில் பரிதவித்த முதியவர்கள் செஞ்சிலுவை சங்கத்தினரால் மீட்கப்பட்டு காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். | முதியவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2334. | 18.09.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை புறநகர், பகுதியில் மேலூர், வாடிப்பட்டி, திருமங்கலம், உசிலம்பட்டி, ஆகிய இடங்களில் நெடுஞ்சாலை பணியில் ஈடுபடும் காவலர்கள் வாகனங்களின் வேகத்தை கட்டுப்படுத்தவும், விபத்து நடைபெறும் இடங்களில் உடனடி மீட்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள பணம் வசூலிப்பதாக காவலர்கள் மீது புகார். | லஞ்சம் & காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்முரசு |
| 2335. | 18.09.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டியைச் சேர்ந்த தாமரைச்செல்வன் மனைவி அன்பு அம்மாள்(41). உசிலம்பட்டி அருகே காமாட்சிபுரம் பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்து வருகிறார். பள்ளியிலிருந்து வீட்டிற்கு நடந்து வரும்பொழுது பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் அன்பு அம்மாளின் கழுத்திலிருந்த 3 பவுன் நகையை மர்ம நபர்கள் பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 2336. | 18.09.2011 | **மதுரை மாவட்டம்:** வண்டியூர் யமுனா நதி தெருவைச் சேர்ந்த ஜலாலுதீன் மனைவி பாத்திமாபீவி(45). வீட்டில் தனியாக இருந்த பாத்திமாபீவியை மர்ம பெண்கள் 4 பேர் அவரது கணவருக்கு தோஷம் கழிப்பதாக கூறி 14 பவுன் நகையைப் பறித்துச் சென்றதாக பாத்திமாபீவி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 2337. | 18.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழநி அருகே | பெண்கள் மீதான | தமிழ்முர |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பூலாம்பட்டி தெற்கு தெருவைச் சேர்ந்த மணியன் மனைவி சாதனா(17). அருகில் உள்ள பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் சாதனாவை கணக்கன்பட்டியைச் சேர்ந்த ராஜா, மீனாகுமாரி, செல்லத்துறை ஆகியோர் சாதனாவை ஆம்னி வேனில் கடத்தியதாக புகார். மீனாகுமாரி, மற்றும் 3 பேர் கைது. | வன்முறை & கடத்தல் | சு |
| 2338. | 19.09.2011 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறையை அடுத்துள்ள பணிக்கம்பாளையம் பகுதியைச் சேர்ந்த பெருமாள் மனைவி சரசாள்(40). கடை நடத்தி வரும் சரசாளிடம் மர்ம நபர்கள் 2 பேர் பொருட்கள் வாங்குவது போல் ஏமாற்றி சரசாளின் 2 பவுன் நகையைப் பறித்துச் சென்றதாக சரசாள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினச்சூ ரியன் |
| 2339. | 19.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** கடலாடி அருகே என் பெரியநாயகிபுரம் கிராமத்தைச் சேர்ந்த அந்தோணி மனைவி மரியபுஷ்பம்(45). கணவன் மனைவி குடும்பத்தகராறில் மனமுடைந்த மரியபுஷ்பம் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினச்சூ ரியன் |
| 2340. | 19.09.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** உளுந்தூர்பேட்டை தாலுகா, களமருத்தூரில் அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் கிளியூர் மாணவர்களுக்கும், எம் . குண்ணத்தூர் மாணவர்களுக்கும் இடையே பேருந்தில் செல்லும் போது தகராறு. கிளியூரைச் சேர்ந்த 12ம் வகுப்பு மாணவர்கள் சினுவாசன், நடராஜன், தங்கராசு மூவரையும் வகுப்பாசியர் திட்டியதோடு, பெற்றோரை அழைத்து வரும்படி கூறியதால் மனமுடைந்த மாணவன் தங்கராசு வகுப்பறையில் விஷம் குடித்துத் தற்கொலை முயற்சி. மாணவன் மருத்துவமனையில் சிகிச்சை. | வகுப்பறை வன்முறை | தினச்சூ ரியன் |
| 2341. | 19.09.2011 | **மதுரை மாவட்டம்:** புதுவிளாங்குடியைச் சேர்ந்த ராஜமகாலிங்கம் மனைவி மணிமேகலை(20). மணிமேகலையை கர்ப்பத்தை கலைக்குமாறு ராஜமகாலிங்கம் மற்றும் அவரது குடும்பத்தார் துன்புறுத்துவதாக மணிமேகலை புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2342. | 19.09.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே கீழக்ள கள்ளந்திரியைச் சேர்ந்த ஆனந்தக்குமார் மனைவி மணிமேகலை(25). திருமணமாகி ஓராண்டு ஆன நிலையில் மணிமேகலை தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2343. | 19.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயில் சேதுமாதவ தீர்த்தம் பிரகாரத்தில் அனாதையாக விடப்பட்ட கை, கால் இயக்கம் இல்லா மூன்று வயது பெண் கிடந்ததாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2344. | 19.09.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி மேற்கு தொகுதி இடைத்தேர்தல் அ.தி.மு.க., வேட்பாளர் பரஞ்ஜோதி மனைவி டாக்டர் ராணி. தனது கணவருக்கு பல பெண்களுடன் தொடர்பு உள்ளதாகவும் தட்டிக் கேட்டதால் அவர் வீட்டிற்கு வருவதில்லை என ராணி பரஞ்ஜோதி மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2345. | 19.09.2011 | **தேனி மாவட்டம்:** போடி கொட்டகுடி ஆற்றில் அனுமதியின்றி மணல் அள்ளிய 9 மாட்டு வண்டிகள் பறிமுதல். | மணல் கொள்ளை | தீக்கதிர் |
| 2346. | 19.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடியில் இமானுவேல் சேகரனின் நினைவு தினத்தின்போது ஏற்பட்ட கலவரத்தில் இக்கிராமத்தைச் சேர்ந்த பலர் மீது காவலர்கள் வழக்கு. இரவு நேரங்களில் விசாரணை என்ற பெயரில் காவலர்கள் அருகே உள்ள கிராமங்களில் வசிக்கும் பெண்களை மிரட்டுவதோடு, இழிவாக பேசுவதைக் கண்டித்து பெண்கள் சாலை மறியல். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2347. | 19.09.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை பாடி, புதூர் இமானுவேல் மெட்ரிக் பள்ளியில் 9ம் வகுப்பு படிக்கும் மாணவி ரம்யா. வகுப்பாசிரியர் ரம்யாவை அடித்ததால் மனமுடைந்த ரம்யா வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை. | வகுப்பறை வன்முறை | Times of India |
| 2348. | 20.09.2011 | **சென்னை மாவட்டம்:** சாலி கிராமத்தில் வசிக்கும் வசந்தி, கணேஷ், தம்பதியரின் 2 வயது குழந்தை வீட்டிற்கு முன் விளையாடி கொண்டிருக்கும் போது மர்மமான முறையில் மாயம். | குழந்தைகள் மீதான வன்முறை | கலைஞர் டிவி |
| 2349. | 20.09.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூரில் பெட்லாண்ட் அரசு மருத்துவமனையில் வெள்ளை அடித்து கொண்டிருந்த சசிக்குமார் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். மின்சாரம் இயங்காது என்று கூறியதால் அவர் வெள்ளை அடிக்க ஒத்துக் கொண்டார். ஆனால் அவ்விடத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் விஜய் வந்ததால் திடீர் என்று மின்சாரத்தை இயக்க செய்தனர். இத்தகவலை | மருத்துவர் அலட்சியம் | கலைஞர் டிவி |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சசிகுமாருக்கு தெரிவிக்கவில்லை இதனால் அவருக்கு மின்சாரம் தாக்கியது. மேலும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்குத் தேவையான சிகிச்சை அளிக்கப்படவில்லை. | | |
| 2350. | 20.09.2011 | **கோவை மாவட்டம்:** காட்டூர் காளீஸ்வரா பகுதியில் உள்ள அரசு உண்டு உறைவிட பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு பாலியல் துன்புறுத்தல். மற்றும் ஆசிரியர்கள் அவர்கள் வீட்டு கழிவறையை சுத்தம் செய்யவும், அவர்களின் சூ துடைக்கவும் மாணவர்களை துன்புறுத்துவதாக பாதிக்கப்பட்ட குழந்தைகள் அப்பகுதி மாவட்ட ஆட்சியாளரிடம் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | கலைஞர் டிவி |
| 2351. | 20.09.2011 | **மதுரை மாவட்டம்:** மண்ணச்சநல்லூரை அடுத்த சின்னமரெட்டி பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சுந்தர்ராஜ் மகள் பிரியா(16). மண்ணச்சநல்லூரில் உள்ள பள்ளியில் பிளஸ் 1 படித்து வந்தார். சின்னமரெட்டி பாளையத்தைச் சேர்ந்த லாரி டிரைவர் வேணுகோபால்(23) பிரியாவை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 2352. | 20.09.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரியில் சுற்றுலா வந்த பெண்களை சினிமா பாட்டு பாடி கேலி கிண்டல் செய்ததாக கோவில்பட்டியைச் சேர்ந்த மனோகரன்(26) கைது. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 2353. | 20.09.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** உளுந்தூர்பேட்டையை அடுத்த திருவெண்ணெய்நல்லூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் ஏனாதிமங்கலத்தைச் சேர்ந்த ஏழுமலை மகள் சரண்யா(19) வேலை செய்தார். அதே மருத்துவமனையில் வேலை செய்த ராஜசேகர்(57) சரண்யாவை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. மறுத்த சரண்யாவை ராஜசேகர் கத்தியால் குத்திக் கொலை செய்ததாக கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & கொலை | தமிழ்சுடர் |
| 2354. | 20.09.2011 | **நீலகிரி மாவட்டம்:** குன்னூரில் உள்ள புனித ஜோசப் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களிடம் அரசு நிர்ணயம் செய்த கட்டணத்தை விட கூடுதலாக வசூல் செய்தவதாக பெற்றோர் பள்ளி முற்றுகை. | கூடுதல் கல்விக் கட்டணம் | தீக்கதிர் |
| 2355. | 20.09.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி இலங்கை தமிழர் முகாமில் தங்கியுள்ள தன்னேரி | மருத்துவர்கள் அலட்சியம் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகன் மோகன்தாஸ்(30). சாலை விபத்தில் காயமடைந்த மோகன்தாஸ் திருச்சி தனியார் மருத்துவமனையில் அனுமதி. இறந்துவிட்டதாக மோகன்தாஸ் மூட்டைக்கட்டி கொடுக்கப்பட்டார். உடல் அசைவால் உறவினர்கள் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். மோகன்தாஸ் மருத்துவமனையில் சிகிச்சை. | | |
| 2356. | 20.09.2011 | **மதுரை மாவட்டம்:** சின்ன உலகாணியைச் சேர்ந்த பாலமுருகன் மனைவி பூமாரி(19). கணவர் மற்றும் மாமியார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதோடு மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததாக பூமாரி வாக்குமூலம். கணவர் மற்றும் மாமியார் மருதாயிக்கு ஆயுள்தண்டனை வழங்கி நீதிபதிகள் உத்தரவு. | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை & கொலை | தினமலர் |
| 2357. | 20.09.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் நாவினிப்பட்டியைச் சேர்ந்த அப்துல் ரசாக் மகள் ரஹமத்நிஷா(18). அதே பகுதியைச் சேர்ந்த சரவணன், ராஜேஸ்கண்ணா, முத்து மற்றும் உறவினர்கள் 6 பேர் சேர்ந்து ரஹமத் நிஷாவை கடத்தியதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 2358. | 20.09.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூரைச் சேர்ந்த கார்மேகம்(25) மனைவி ரூபினி(23). தன் கணவர் தன்னை அடித்து, உதைத்து, உணவு கொடுக்காமல் துன்புறுத்துவதாக கார்மேகம் மீது ரூபினி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2359. | 20.09.2011 | **கரூர் மாவட்டம்:** அரசு புறம்போக்கு நிலத்தில் அனுதியின்றி மணல் எடுத்ததாக அரவக்குறிச்சி தொகுதி திமுக எம்எல்ஏ கே.சி. பழனிச்சாமி மீது மணவாசி கிராம நிர்வாக அதிகாரி நீலமேகம் புகார். கே.சி. பழனிச்சாமி கைது. | மணல் கொள்ளை | தினகரன் |
| 2360. | 20.09.2011 | **மதுரை மாவட்டம்:** வசந்த நகரைச் சேர்ந்த சிவகுருநாதன் மனைவி ருக்மணிதேவி. தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார். கணவருக்கும் வேறு பெண்ணுடன் தொடர்பு இருப்பதைக் கண்டித்தார் ருக்மணி. கணவன் மனைவி தகராறில் மனமுடைந்த ருக்மணி தூக்கமாத்திரை சாப்பிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 2361. | 21.09.2011 | **வேலூர் மாவட்டம்:** மதுரை தெற்குவாசல் குப்புபிள்ளை தோப்பு நகரைச் சேர்ந்த சுல்தான் மனைவி நூர்ஜஹான்(20). கூடுதல் வரதட்சணைக் | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதாக புகார். | | |
| 2362. | 21.09.2011 | **மதுரை மாவட்டம்:** தேனி பிசி பட்டியைச் சேர்ந்த பாலகுருசாமி(75) யின் மகளை தேனி டிஎஸ்பி வழக்கு ஒன்றின் விசாரணைக்கான அழைத்துச் சென்று, சட்டவிரோதக் காவலில் வைத்திருப்பதாக பாலகுருசாமி டிஎஸ்பி மீது புகார். ஆத்திரமடைந்த டிஎஸ்பி பாலகுருசாமி மீது நில மோசடி செய்ததாக பொய் வழக்குப்போட்டு பாலகுருசாமியை கைது செய்ததாக பாலகுருசாமி கோர்ட்டின் மனு. | காவல் நிலையச் சித்திரதை | தினகரன் |
| 2363. | 21.09.2011 | **வேலூர் மாவட்டம்:** தேவராம் சாக்குலூத்து மெட்டு, கோம்பை ராமக்கல்மெட்டு உள்ளிட்ட மலையடிவாரப் பகுதிகளின் வழியாக கழுதைகள் மூலம் கேரளாவுக்கு கடத்த முயன்ற 350 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 2364. | 21.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் சம்பந்தபுரம், சீதகாதி தெருவைச் சேர்ந்த அன்பழகன் மனைவி செய்யது அலி பாத்திமா(19). கணவன் மனைவி குடும்பத் தகராறில் தடுக்க வந்த பாத்திமாவின் தந்தை சிக்கந்தரை அன்பழகன் வெட்டிக் கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினசூரி யன் |
| 2365. | 21.09.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை தெப்பக்குளம் சட்டம் ஒழுங்கு எஸ்.ஐ., சந்திரன்(40). சந்திரன் பணியில் போதையில் இருந்ததாக புகார். மருத்துவ சோதனையில் உறுதியானது. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2366. | 21.09.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ரேஸ்கோஸ் காலனியில் வசிக்கும் வெண்டீஸ்வரனின் 14 வயது பேத்தி. சொக்கிகுளத்தில் தனியார் பள்ளியில் 9–ம் வகுப்பு படிக்கும் மாணவியை காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமணி |
| 2367. | 21.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடியில் இமானுவேல் சேகரனின் நினைவு தினத்தின் போது ஏற்பட்ட கலவரத்தால். கலவரப் பகுதிகளில் இரவு நேரங்களில் தேடுதல் வேட்டை எனும் பெயரில் காவலர்கள் துரத்தியதில் அவர்களுக்கு பயந்து ஒடிய தொரூவளூர் கிராமத்தைச் சேர்ந்த பெரியகருப்பன் மகன் வேலு தடுமாறி விழுந்து மரணம். மற்றும் களங்குடி கிராமத்தைச் சேர்ந்த காளியப்பன் பாம்பு கடித்தும் மரணம். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2368. | 21.09.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகேயுள்ள கல்லூத்து மற்றும் சுற்று வட்டாரப் பகுதியைச் சேர்ந்தவர் | அடிப்படை வசதியின்மை & | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாணவர்கள் உத்தப்பநாயக்கனூர், மற்றும் அருகேயுள்ள வெள்ளமலைப்பட்டி பகுதிக்கு அரசு பேருந்து மூலம் படிக்க வருகின்றனர். மாணவ, மாணவிகளுக்கு போதுமான பேருந்து வசதி இல்லாததால். இக்கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் படியில் தொங்கி வரும் போது கீழே விழுந்து காயம். பேருந்து சிறைப்பிடிப்பு. | குழந்தைகள் மீதான வன்முறை | |
| 2369. | 22.09.2011 | **நாமக்கல் மாவட்டம்:** திருச்செங்கோடு அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மாணிக்கம் என்பவர் 5ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக மாணவிகளின் பெற்றோர் பள்ளியை முற்றுகை. | வகுப்பறை வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை | கலைஞர் டிவி |
| 2370. | 22.09.2011 | **சேலம் மாவட்டம்:** கெங்கவள்ளி ஒன்றியம் அதிமுக விவசாய அணி செயலாளர் நந்தகோபால். இவர் குடிநீர் வாரிய ஒப்பந்த காண்டிராக்டராக வேலை செய்கிறார். குப்பனர்நாயக்கன்பாளையத்தில் குடிநீர் குழாய் போடும் டெண்டர் தனக்கு கிடைக்க குடிநீர் வாரிய நிர்வாகப்பொறியாளர் ரமேஷை அணுகினார். அவர் ரூபாய் 50 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக நந்தகோபால் புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 2371. | 22.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி ஆர்வார்களம் பகுதியில் வசிக்கும் சப்பாணி மனைவி இசக்கியம்மாள்(24). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சப்பாணி இசக்கியம்மாளை அரிவாளால் வெட்டிக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 2372. | 22.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் ஈஸ்வரி நகரைச் சேர்ந்த கருப்பசாமியின் தந்தை வேலு(70). வாக்கிங் சென்ற தனது தந்தையை காணவில்லை என திருநகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் காவலர்கள் அலட்சியமாக செயல்படுவதாக கருப்பசாமி சட்டப்பணிகள் ஆணைக்குழுவிடம் புகார். | காவல் நிலையச் சித்திரவதை & முதியோர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2373. | 22.09.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றும் எபினேசர். இவர் கல்லூரி வளாகத்தில் குடியிருந்து வருகிறார். இவரிடம் டியூசன் படிக்க வந்த பிளஸ் 1 மாணவி ஜாஸ்மின். டியூசனில் தனியாக இருந்த ஜாஸ்மினை அங்கு வந்த 2 மர்ம நபர்கள் கயிரால் கட்டி அவரது 21/2 பவுன் நகையைப் பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2374. | 22.09.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் காவலர்கள் நடத்திய அதிரடி சோதனையில் எம்பிபிஎஸ் படிக்காமல் அனுபவத்தின்பேரில் மருத்துவர்கள் என கூறி போலி மருத்துவர்களாக இருந்த 32 பேர் கைது. | போலி மருத்துவர்கள் | தினகரன் |
| 2375. | 22.09.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர்அடுத்த கீழ் அரசம்பட்டடு கிராமத்தைச் சேர்ந்த தர்மன் மனைவி பவித்ரா(29) மகள் மோனிஷா(3). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த பவித்ரா குழந்தையுடன் கிணற்றில் விழுந்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 2376. | 23.09.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** இடையூர் அருகே பள்ளி மாணவன் தனுஸ்(6). தனுஸ் மர்ம நபர்களால் மயக்க ஊசி போட்டுக் கடத்தப்பட்டார். காவல்துறைக்கு தகவல் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என புகார். மாணவர் கடத்தப்பட்டவர்களிடம் இருந்து தப்பி வந்தான். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் & காவல் நிலையச் சித்திரவதை | கலைஞர் டிவி |
| 2377. | 23.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகேயுள்ள நெடுங்குளம் தெற்குத் தெருவைச் சேர்ந்த பழனிச்சாமி மனைவி பாண்டிச்செல்வி. இருவருக்கும் திருமணமாகி மூன்று நாட்களே ஆன நிலையில் பழனிச்சாமி பக்கத்து வீட்டில் வசிக்கும் விஜயாவுடன் மாயமானதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினசூரியன் |
| 2378. | 23.09.2011 | **மதுரை மாவட்டம்:** அரசரடி பகுதியைச் சேர்ந்த சின்னச்சாமி மனைவி சாந்தி(41). சாந்தியுடன் பணிபுரியும் ஆசிரியர் ஒருவர் தற்கொலை செய்து தொடர்பாக காவலர்கள் சாந்தியை விசாரணைக்கு அழைத்ததால் மனமுடைந்த சாந்தி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை & காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |
| 2379. | 23.09.2011 | **மதுரை மாவட்டம்:** கிருஷ்ணாபுரம் காலனியைச் சேர்ந்த நரசிம்மராஜா மகள் திவ்யா(13). தல்லாகுளம் பகுதியில் உள்ள பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் திவ்யா வீட்டின் மொட்டைமாடியில் மண்ணெய்ணெய் ஊற்றித் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினமணி |
| 2380. | 23.09.2011 | **நாமக்கல் மாவட்டம்:** பரமத்தி வேலூரைச் சேர்ந்த வீரமணி மனைவி தேன்மொழி இருவரும் கரூர் | கொத்தடிமை தொழிலாளர்கள் & | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ராசப்பனின் சாய பட்டறையில் கொத்தடிமையாக வேலை செய்தனர். வீரமணியை ராசப்பன் சித்திரவதை செய்ததால் வீரமணி மரணம். இது குறித்தும் காவலர்கள் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவில்லை தேன்மொழியின் சகோதரர் அசோக்குமார் மனு தாக்கல். | காவல் நிலையச் சித்திரவதை | |
| 2381. | 23.09.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் கஜேந்திரன். பனையூர் மேலத்தெருவில் நடைபெற்ற கொலை வழக்கில் வரதன் என்பவர் பெயரை வழக்கில் சேர்க்காமல் இருக்க ரூ. 40 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக கஜேந்திரன் பணியீடை நீக்கம். | லஞ்சம் & காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2382. | 23.09.2011 | **கடலூர் மாவட்டம்:** விழுப்புரம் ராதாகோவில் தெருவைச் சேர்ந்த கந்தவேல்(34). இவர் கொலை வழக்கில் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சிறைச்சாலையில் கந்தவேல் மற்றும் ஐயனார் இருவருக்கும் மோதல். ஐயனார் தாக்கியதில் கந்தவேல் மரணம். | சிறைச்சாலை வன்முறை & சிறைக்கைதி மரணம் | தீக்கதிர் |
| 2383. | 23.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** சாயர்புரம் அடுத்த இருவப்பபுரத்தைச் சேர்ந்த மணிகண்டன்(36). தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் கான்ட்ராக்ட்டராக உள்ளார். செய்த பணிகளுக்கு அனல்மின் நிலைய நிர்வாகம் மணிகண்டனுக்கு பணம் தரவேண்டி இருந்தது. மணிகண்டன் பணம் பெற உதவி இன்ஜினியர் மோகன்தாஸை அணுகினார். அவர் ரூபாய் 10,000 லஞ்சம் கேட்டதாகப் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 2384. | 23.09.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் மருத்துவமனையில் இரவு பணியில் மருத்துவர் லட்சுமிபாய் இருந்தார். கச்சிராயன்பட்டியைச் சேர்ந்த குமுந்தன்(33) தனக்கு வேண்டிய பெண்ணுக்கு உள்நோயாளியாகச் சேர்த்து சிகிச்சை அளிக்கக் கூறினார். படுக்கை வசதி இல்லை என மருத்துவர் லட்சுமிபாய் மறுப்பு. ஆத்திரமடைந்த குமுந்தன் மருத்துவர் லட்சுமிபாயை ஆபாசமாக திட்டியதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2385. | 24.09.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வண்டியூர் பகுதியைச் சேர்ந்த சுகாதார ஆய்வாளர் பாலகிருஷ்ணன். தனியார் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளிக்கு | லஞ்சம் | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுகாதாரச் சான்றிதழ் வழங்குவதற்கு ரூ. 1,300 லஞ்சம் கேட்டதாக பாலகிருஷ்ணன் மீது புகார். கைது. | | |
| 2386. | 24.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை புளியம்பட்டி பகுதியில் உள்ள முத்துச்சாமிபுரம் பகுதியைச் சேர்ந்த இருளன் மனைவி மங்கையர்கரசி(55). இருளனுக்கு விபத்து நடந்ததில் வழக்கறிஞர் பெருமாள்சாமி மூலம் ரூ. 1 லட்சத்து 25 ஆயிரம் நஷ்டஈடு கிடைத்தது. அந்த தொகையில் பெருமாள்சாமி ரூ. 1 லட்சம் லஞ்சம் பேட்டார். மங்கையர்கரசி மறுத்ததால் ஆத்திரமடைந்த பெருமாள்சாமி மங்கைர்கரசிக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக புகார். | லஞ்சம்<br>&<br>கொலை மிரட்டல் | தினசூரியன் |
| 2387. | 24.09.2011 | **தேனி மாவட்டம்:** தேனி அருகே வீரபாண்டியில் நள்ளிரவில் காவலர்கள் வீடுகளுக்குள் புகுந்து பள்ளி, கல்லூரி மாணவர்களை பிடித்துச் சென்றதை கண்டித்து பெண்கள் சாலை மறியல். | குழந்தைகள் மீதான வன்முறை<br>&<br>காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 2388. | 24.09.2011 | **சென்னை மாவட்டம்:** பெங்கலூர் அருகே சரஸ்வதி நகர் என்ற பெயரில் வீட்டுமனைகளை பிரித்து தவணை முறையில் விற்பனை செய்யும் திட்டத்தை திருச்செங்கோட்டைச் சேர்ந்த பொன்னுசாமி தொடங்கினார். இத்திட்டத்தில் கோவை, திருப்பூர், மாவட்ட குறுந்தொழில் மற்றும் ஊரகத்தொழில் முனைவோ சங்கம்(காட்மா) சார்பில் 38 பேர் சுமார் ரூ. 15 லட்சம் பணம் செலுத்தினர். மூன்றாண்டுகளுக்கு மேல் பணம் கட்டியும், வீட்டுமனை தராமல் ஏமாற்றியதாக புகார். | மோசடி | தீக்கதிர் |
| 2389. | 24.09.2011 | **திருப்பூர் மாவட்டம்:** சாமளாபுரம் அருகே பரமசிவம் பாளையம் கருப்பராயன்கோயில் வீதியில் வசிக்கும் அருந்தியர் சமூகத்தைச் சேர்ந்த கே. கருப்பசாமி(32). பகவதியம்மன் உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த சிவசண்முகம்(26) அதே உணவகத்தில் சாப்பிட சென்ற கருப்பசாமியை அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆதிக்கச் சாதியினருக்கு சமமாக அமர்ந்து சாப்பிடுவதா என சாதியைச் சொல்லித் தகாத வாாத்தைககாளல் திட்டி செருப்பால் அடித்ததாகப் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2390. | 24.09.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி | ரேசன் அரிசி பறிமுதல் | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒரக்கலியூர் அருகே வாகனச் சோதனையில் போது பொள்ளாச்சியில் இருந்து கேரளாவுக்கு கடத்த முயன்ற 38 மூட்டைகளில் இருந்த 900 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | | |
| 2391. | 24.09.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** திருமுல்லைவாயல் ஜாக்நகர் அன்னை தெரசா தெருவில் வசிப்பவர் மகேஷ் மனைவி சபிதா(31). தனது குழந்தையை பள்ளியில் விட்டு திரும்பும் வழியில் இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் சபிதாவின் 2 பவுன் நகையைப் பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2392. | 24.09.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** கும்மிடிப்பூண்டி அருகில் உள்ள மங்காவரம் கிராமத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் மகள் கௌசல்லியா(15). அருகில் உள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார். வீட்டில் பெற்றோர் கண்டித்ததால் மனமுடைந்த கௌசல்யா வகுப்பறையில் தூக்குப்போட்டுத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தீக்கதிர் |
| 2393. | 24.09.2011 | **மதுரை மாவட்டம்:** சின்ன அனுப்பானடி பகுதியில் உள்ள ரேசன் கடையின் மாடியில் ஆயிரத்து 135 கிலோ ரேசன் அரிசியை பதுக்கிய ரேசன் கடை எடையாளர் பாண்டி உள்பட 2 பேர் கைது. | ரேசன் அரிசி கொள்ளை | தினகரன் |
| 2394. | 24.09.2011 | **சேலம் மாவட்டம்:** இடைப்பாடி கரட்டூரைச் சேர்ந்த லிங்கன் மகன் மகன் வெங்கடேஷ்(27). அதே பகுதியைச் சேர்ந்த பழனிச்சாமி மகள் கலா இருவரும் காதலித்தனர். தனது மகளை கடத்திச் சென்றதாக பழனிச்சாமி புகார். காதல் ஜோடியை காவலர்கள் மிரட்டியதால் மனமுடைந்த வெங்கடேஷ் விஷம் குடித்துத் தற்கொலை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2395. | 24.09.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் தெற்குத் தெருவைச் சேர்ந்த பழனிக்குமார் மனைவி பூங்கொடி. 45 நாட்களே ஆன பெண் குழந்தை. குழந்தை அழுததால் சாக்லைட் என நினைத்து எறும்பு சாக்பீஸை குழந்தைக்கு கொடுத்ததால் குழந்தை மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2396. | 24.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதி அருகேயுள்ள மண்டல மாணிக்கம் பகுதியைச் சேர்ந்த பழனிக்குமார் மர்ம நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் பரமக்குடி கலவரத்தால் மண்டலமாணிக்கம் கிராமத்திற்கு இரண்டு | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வார காலமாக பேருந்து வசதியில்லாமல் மக்கள் 10.கி.மீ தூரம் நடந்துச் செல்ல வேண்டியுள்ளதாக புகார். | | |
| 2397. | 25.09.2011 | **புதுச்சேரி மாநிலம்:** புதுச்சேரி திருமாம்பாக்கம் அடுத்துள்ள பனித்திட்டு மீனவ கிராமத்தைச் சேர்ந்த 30 பேர் 6 படகுகளில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர். மோகன், எழுமலை, ஐயனார், சுகன், மாரிமுத்து 5 பேர் சென்ற படகு கடலில் மூழ்கியது. 5 மீனவர்களும் உயிர்தப்பினர். | மீனவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2398. | 25.09.2011 | **கடலூர் மாவட்டம்:** புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை கேண்டீனில் 2.5 டன் தமிழக ரேசன் அரிசியை பதுக்கி வைத்ததாக பொறியாளர் மகேஷ் கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 2399. | 25.09.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** திருச்செந்தூர், ஆறுமுகநேரி காமராஜர்புரம் வெற்றிவேல் மனைவி பால்தாய்(29). வாய் பேசவும் முடியாது, காதும் கேட்டகாத பால்தாய் தனியாக வீட்டில் தூங்கிய போது, மர்ம நபர்கள் பால்தாயியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & கொலை | தினமலர் |
| 2400. | 25.09.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் பிரசன்னா கலாலனியைச் சேர்ந்த குபேந்திரன்(32). அதே பகுதியைச் சேர்ந்த 9 வயது சிறுமி தனது வீட்டின் முன் விளையாடிய சிறுமியை பாலியல் பலாத்காரம். குபேந்திரன் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2401. | 26.09.2011 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் காளியம்மன்பட்டி ராஜீவ் காந்தி நகரைச் சேர்ந்த ராஜா மகள் ராஜேஸ்வரி(5). பள்ளிக்குச் சென்ற சிறுமியை அதே பகுதியில் கோயில் பூசாரி குமார் ராஜேஸ்வரியை கொலை செய்து கிணற்றில் வீசியதாக புகார். குமார் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தீக்கதிர் |
| 2402. | 26.09.2011 | **நாகை மாவட்டம்:** நாகை கோடியக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்து தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் என கூறி தமிழக மீனவர்களை கத்தியால் மிரட்டி அவர்களிடம் இருந்த பொருட்களை பறிமுதல் செய்ததாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினமணி |
| 2403. | 27.09.2011 | **சென்னை மாவட்டம்:** இராயபுரம் காவல் நிலையத்தில் அன்வர் என்பவரை காவலர்கள் விசாரணை என்ற பெயரில் அடித்துச் சித்திரவதை. இதில் அவர் படுகாயம் அடைந்து சிகிச்சை. | காவல் நிலையச் சித்திரவதை | கலைஞர் டிவி |
| 2404. | 27.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் | குழந்தைகள் மீதான | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | புல்லக்கோட்டை சாலையும், நான்கு வழிச்சாலையும் இணையும் இடத்தில் மேம்பாலம் இல்லை. இதனால் கிழக்கு பாண்டியன் காலனி, மேற்கு பாண்டியன் காலனி, பராசக்தி காலனி, லட்சுமிநகர், சின்ன மூப்பன்பட்டி, புல்லக்கோட்டை, வடமலைக்குறிச்சி, பாவாலி இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ–மாணவியர்கள் அவசர கதியாக சாலையை கடக்கின்றனர். போது விபத்துகள் நடப்பதாக புகார். இந்நிலையில் மேற்குபாண்டியன் காலனியைச்சேர்ந்த வேல்வாண்டியன் மகன் முனீஸ்வரன்(8) லாரி மோதி மரணம். பொதுமக்கள் சாலை மறியல். | வன்முறை | |
| 2405. | 27.09.2011 | **புதுவை மாநிலம்:** புதுவை சுல்தான்பேட்டை அடுத்த கல்மேடு தெருவைச் சேர்ந்த ரவுத் மகன் மன்சூர்(20). அப்பகுதியில் உள்ள சிறுவர்களிடம் தனது செல்போனில் உள்ள ஆபாச படம் காட்டி, ஆபாசம் படம் பார்த்த மாணவர்களை தனது செல்போனில் படம் பிடித்து சிறுவர்களின் வீட்டில் கூறிவிடுவதாக சிறுவர்களை மிரட்டி பணம் பறித்ததாக புகார். மன்சூர் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2406. | 27.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வீரசிக்கம்பட்டியில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கூத்தான்(38) ஊராட்சித் தலைவர் தேர்தலில் போட்டியிட பொதுமக்களிடம் ஆதரவு கேட்டுச் சென்றார். சொக்கலிங்கபுரத்தைச் சேர்ந்த ஆதிக்கச் சாதியினர் கூத்தனை தாக்கியதோடு, அவரது மனைவி சிவனம்மா(28)வின் 10 பவுன் நகையை பறித்துச் சென்றதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2407. | 27.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் அருகே பூம்பாறையைச் சேர்ந்த பால்சாமி மனைவி அன்னமயில்(45). வீட்டில் தனியாக இருந்த கணவன் மனைவி இருவரையும் மர்ம நபர்கள் கொலை செய்ததோடு நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2408. | 27.09.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** சில்க்குவார்பட்டியைச் சேர்ந்த ராஜலெட்சுமி(28). டி.அய்யம்பாளையத்தைச் சேர்ந்த முருகன் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. ராஜலெட்சுமியிடம் முருகன் பணம் கடன்வாங்கியிருந்தார். முருகன் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணத்தை திருப்பித்தர மறுத்ததால் மனமுடைந்த ராஜலெட்சுமி முருகனின் வீட்டு முன்பு விஷம் குடித்துத் தற்கொலை. | | |
| 2409. | 28.09.2011 | **தேனி மாவட்டம்:** தேவராம் அருகேயுள்ள கோம்பை பி.ரங்கநாதபுரத்தைச் சேர்ந்த சுரேஷ்(27) மனைவி சரண்யா(19). கணவன் மனைவிக்குள் அடிக்கடி தகராறு எற்பட்டுள்ளது. இந்நிலையில் சரண்யா மர்மான முறையில் மரணம். தனது மகளை வரதட்சணை கொடுமை செய்து கொலை செய்ததாக சரண்யாவின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2410. | 28.09.2011 | **கோவை மாவட்டம்:** கோவை ஆலந்துறை, பூலுவப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட நாதேகவுண்டன் புதுக்காலனியில் வசிக்கும் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த பழனிச்சாமி மகன் சந்தோஷ்குமார்(24). அப்பகுதியில் உள்ள டீ கடையில் சந்தோஷ்குமார் தனது இருசக்கர வாகனத்தில் சாய்ந்துக் கொண்டு டீ குடித்துக் கொண்டிருந்ததால் ஆத்திரமடைந்த ஆதிக்கச்சாதியைச் சேர்ந்த மணிகண்டன்(18) சந்தோஷைத் தாக்கியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2411. | 28.09.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளி உடப்பன்பட்டி கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் மதிய சத்துணவு சாப்பிட்ட குழந்தைகள் வாந்தி, மயக்கம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமணி |
| 2412. | 28.09.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் சந்தைபேட்டையைச் சேர்ந்த மரியவில்லி பவுலினாள்(35). இவர் நான்காவது பிரசவத்திற்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் தவறான சிகிச்சை அளித்ததால் மரியவில்லி பவுலினாள் மரணமடைந்ததாக உறவினர்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை & மருத்துவர்கள் அலட்சியம் | தினமலர் |
| 2413. | 29.09.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஜவ்வாது மலையை சுற்றிய ஐந்து கிராமங்களில் இருந்து 10 சிறுமிகளை கொத்தடிமையாக சேலத்தைச் சேர்ந்த மணிவண்ணன் அழைத்துச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கொத்தடிமை | கலைஞர் டிவி |
| 2414. | 29.09.2011 | **சென்னை மாவட்டம்:** போரூரில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் எம்.டி., இறுதியாண்டு படிக்கும் மாணவி பிரேமா(28). கார்த்திக் மருத்துவமனையை நடத்தி வரும் பல் மருத்துவர் முரளிகிருஷ்ணபாரதி(34) பிரேமாவை | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | திருமணம் செய்வதாக ஏமாற்றியதோடு பழரசத்தில் மயக்கமருந்துக் கொடுத்து பாலியல். முரளிகிருஷ்ணபாரதி கைது. | | |
| 2415. | 29.09.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை உசிலம்பட்டி ஆனந்தாநகரைச் சேர்ந்த செல்வபாண்டி மனைவி வளர்மதி(42). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக வளர்மதி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2416. | 29.09.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் நேசமணிகர் காவல்நிலைய காவலராக பணிபுரியும் காவலர் ஸ்ரீரெங்கநாதன். ஆசாரிபள்ளம் – ராணித்தோட்டம் இடையில் உள்ள சோதனை சாவடியில் இரவு பணியின் போது ஸ்ரீரெங்கநாதன் போதையில் இருந்தார். இரவு சோதனை சாவடி ரோந்துச் சென்ற எஸ்.ஐ. வில்லிபாய் போதையில் இருந்த ஸ்ரீ ரெங்கநாதன் ஆபாசமாக பேசியதாக புகார். ஸ்ரீரெங்கநாதன் கைது. | பெண்கள் மீதான வன்முறை & காவல்நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2417. | 30.09.2011 | **கோவை மாவட்டம்:** திருப்பூர் வீரபாண்டியில் வசிக்கும் நல்லம்மாள் வணிகவளாகம் கட்டி வருகிறார். இரண்டு மர்ம நபர்கள் இரும்பு கம்பி மற்றும் சிமெண்ட் வாங்கித் தருவதாக கூறி ரூ. 6 லட்சம் மோசடிசெய்ததாக நல்லம்மாள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2418. | 30.09.2011 | **மதுரை மாவட்டம்:** கீழவளவு அருகே வெள்ளளூர் நாடு கிராமத்தில் ஏழைகாத்த அம்மன் கோயிலில் திருவிழா நடைப்பெற்றது. திருவிழாவிற்கு வந்த இளம்பெண்களை குடிபோதையில் முத்துக்குமரன்(25), முருகேசன்(27), மாங்குடியைச் சேர்ந்த முத்துக்குமார்(21) மூவரும் கேலி செய்ததோடு, கண்டித்த காவலர்களிம் தகராறு செய்ததாக மூவரும் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2419. | 30.09.2011 | **மதுரை மாவட்டம்:** கல்மேடு களஞ்சியம் நகரில் வசிப்பவர் பாலசுப்பிரமணியன் மனைவி முத்துலெட்சுமி(37). வீட்டில் தனியாக இருந்த முத்துலெட்சுமியை மர்ம நபர்கள் கழுத்தை நெறித்துக் கொலை செய்ததாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமணி |
| 2420. | 30.09.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேசுவரம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் எடிசன், டிட்டோ ஆகியோருக்குச் சொந்தமான படகுகளில் மீன் பிடிக்கச் | மீனவர்கள் மீதான வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கற்களால் தாக்கியதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | | |
| 2421. | 30.09.2011 | **திருச்சி மாவட்டம்:** கரூர் செங்குந்தபுரம் புறநகர் பகுதியில் கழிவுநீர் கால்வாய் கட்டும் பணியின் போது பணியில் ஈடுபட்ட 4 பெண் தொழிலாளிகள் கருங்கல் சுவர் இடிந்து விழுந்ததில் மரணம். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்